புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# தமிழ் பண்பாட்டு களங்கள்

து.இந்திராணி,M.A., M.Ed.,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
காஞ்சி ஸ்ரீ கிருக்ஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கீழ்அம்பி, காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு,

ஆய்வு சுருக்கம் :

பண்பாடு என்பதன் சொற்பொருள் விளக்கம், தமிழ் மொழியின் சிறப்புகள், பண்டைய தமிழரின் பண்பாட்டு கூறுகளும், பண்பாட்டு உணவு முறைகள், உணவுக் குறியீடுகள், விருந்தோம்பல், பழக்கவழக்கங்கள், பண்பாட்டின் மருத்துவ முறைகள் பற்றியும், தொலைந்துபோன, மறைந்துபோன பண்டைய தமிழரின் பண்பாடுகளை மீட்டடுருவாக்கம் செய்ய வேண்டியது ஒவ்வொரு தமிழரின் கடமையாகும்.

திறவுச்சொற்கள்:பண்பாடு,அகப்பொருள்,பல்கலைப்புலமை, தமிழ்மாலை, தெய்விக நிலை, குழாயடி, கிணற்றடி, நாகரிகம், அவித்தல், குலக்குறி, இரவுச்சோறு, பழம் போடுதல்.

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன் - குறள் (996)

முன்னுரை :

பண்பாடு என்பது பொருள் உற்பத்தியில் தொடங்குகிறது. பண்பாடு என்பது கூட்டு உற்பத்தியில் விளைந்தது தான் கூடி தொழில் செய்கிற போது அதன் விளைவுகளில் ஒன்றாக உழைப்பில் ஈடுபட்ட தனி மனிதர்களுக்கு இடையிலான உறவு வளர்கிறது. மனித கூட்டம் தான் கருவிகளை உற்பத்தி செய்தன. கல்லிலே உற்பத்தியை தொடங்கிய மனிதன் பின்பு இரும்பு, வெங்கலம், மரம், பொன், வெள்ளி என தன் உற்பத்தி அனுபவங்களை கூட்டு உழைப்பினால் விரிவாக்கிக் கொண்டான்.

தமிழ்மொழியின் சிறப்புகள் :

தமிழ் என்னும் சொல் தமிழர்க்கு இனிமையானது தமிழ் என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள், அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல், மொழி, கவிதை, ‘பல்கலைப் புலமை’ என்றும் கலைப்புலமை என்றும், அழகும், மென்மையும், தமிழ் எனலாம். தமிழ்ப்பாட்டு, மூவாயிரம்தமிழ் இனிமையும் நீர்மையும் தமிழனல் ஆகும் - பிங்கல நிகண்டு தமிழ் என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்ற பொருள்களிலும் வழங்கியுள்ளனர். முரசு கட்டிலில் உறங்கிய மோசிகீரனார் என்ற புலவர்க்கு வேந்தன் ஒருவன் - ‘அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்’இங்கு மொழி, கவிதை, என்பனவற்றையும் தாண்டி பல கலைப்புலமை என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. கம்பன் ‘தமிழ் தழீஇய சாயலவர்’ என்னும் இடத்து தமிழ் என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்திஇலக்கியங்களில் ‘தமிழ்பாட்டு’ என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன தமிழ் இவை பத்துமே ‘மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்’ என்றும் ஆளப்படுகிறது. முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் ‘தமிழ்மாலை’என்றே கூறுவது இங்கு எண்ணத்தகும். சிவநெறி தமிழ்நாட்டில் பிறந்தது எனக் குறிக்க வந்த சேக்கிழார் ‘அசைவில் செழும்தமிழ் வழக்கு’ எனச் சைவத்தையும், சைவமும் வைணமும் சமணமும் தமிழ் மொழியினைத் ‘தெய்விக நிலை’ சார்ந்தனவாகக் கருதின.

ஆயும் குணத்தவ லோகிதன் பக்கல் அகத்தியன் கேட்டு
ஏயும் புவனிக்கு இயல்பிய அருந்தமிழ்

என்பது யாப்பருங்கலம்.பாணினிக்கு வடமொழியையும், அதற்கிணையான தமிழ் மொழியைக் குறுமுனியான அகத்தியர்க்கும் சிவபெருமான் அளித்தார் என்றும் சைவ இலக்கியங்கள் கூறும் 'தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ்' என்று கம்பரும் இக்கருத்தினை ஏற்றுப் பேசுகிறார். வடமொழி ஆதிக்கமும் தெலுங்கு மொழி ஆதிக்கமும் அரசியல் அறிந்த தமிழர்களால் உணரப்பட்ட இடைக்காலத்தில் தமிழ் தெய்வத்தன்மை உடையதாகவும் தாயாகவும் கருதப்பட்டது. 15, 17 ஆம் நூற்றாண்டில் எழுந்த வில்லிபாரதமும், தமிழ்விடுதூதும் இதை உணர்த்தும். 'தலைப் பாவலர் தீஞ்சுவைக் கனியும் தண் தேன் நறையும் வடித்தெடுத்த சாரம் கனிந்தூற்றிருந்த பசுந்தமிழ்' முருகக் கடவுளின் திருவாயில் மணக்கிறது என்பர் குமரகுருபரர். 19ஆம் நூற்றாண்டில் மனோண்மணியம் சுந்தரனார் காலந்தொட்டுத் தமிழ் அரசியல், சமூக, பண்பாடு அளவில் ஒரு மந்திரச் சொல்லாகவே ஆளப்படுகிறது. நாட்டார் வழக்காறுகளில் தமிழ் என்னும் சொல் செம்மையாகப் பேசப்படும் மொழியினை உணர்த்துகிறது.

தங்கத் தமிழ் பேச உங்க
தாய் மாமன் வருவாங்க – தாலாட்டு.
தங்கத் தமிழ் அடியாம்
தாசில்தார் கச்சேரியாம் - என்பது ஒப்பாரி.

குழாயடி, கிணற்றடி என்பது போலத் தமிழடி என்பது ஊர் மன்றத்தைக் குறிக்கும். தமிழ், தமிழன் ஆகிய சொற்களை ஊர்ப்பெயராகவும், மக்கட்பெயராகவும் ஏராளமாக இட்டு வழங்கியிருக்கிறார்கள்.

ஊர்ப்பெயர் : ஆலங்குளத்துக்கருகில் 'தமிழூர், 2 நாங்கு நேரிக்கு அருகில் 'தமிழாக்குறிச்சி' என்ற ஊரும், அருப்புக்கோட்டைக்கருகில் 'தமிழ்ப்பாடி' என்ற ஊரும் உள்ளது.

மக்கட்பெயர் : கல்வெட்டுக்களில் தமிழன் தமிழதரையன் முதலாம் ஆதித்த சோழன் தனது வெற்றிக்குதவிய படைத் தலைவன் ஒருவனுக்குச் 'செம்பியன் தமிழ்வேள்' என்ற பட்டங் கொடுத்தான். சில அதிகாரிகளும் தங்கள் பெயர்களில் தமிழை இணைத்துக் கொண்டனர். 'இருஞ்சோணாட்டு தமழ்வேள் தென்னவன் திருச்சாத்தன்' 'அருந்தமிழ் கேசரிச் சோழப் பெரியான்' 'சாணாட்டு வேளாண் தமிழ்ப்பெற்றான்' ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

பண்பாடு என்பதன் சொற்பொருள் விளக்கம் :

பண்பு, பண்படு, பண்பாடு, ஆகிய சொற்கள் உறவுடைய சொற்களாகத் தமிழில் வழங்கி வருகின்றன. இவற்றில் பண்பாடு என்ற சொல் பழந்தமிழில் வழங்கவில்லை. பழந்தமிழ் இலக்கியங்களாம் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, ஆகியவற்றிலும், காவிய காலஇலக்கியங்களிலும், பக்திக்கால இலக்கியத்திலும் பண்பாடு என்ற சொல்வழக்கு காணப்படவில்லை. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி பண், பண்பு, பண்படு ஆகிய சொற்களை மட்டும் விளக்குகிறது. பண்பாடு என்ற சொல்லை, ரசிகமணி டி.கே.சி. 1937 இல் தமிழில் முதன் முதலாக வழங்கியதாகப் பேராசிரியர். என். வையாபுரிப் பிள்ளை குறிப்பிடுகிறார்.

பண்பு + படு= பண்பாடு

பண் + படு = பண்பாடு என்று அறிஞர்கள் பண்பாடு என்ற சொல்லின் வரவைக் குறிப்பர். பண்பு என்ற சொல்லிற்குக் குணம், தகுதி, விதம், சுபாவம், முறை என்ற பொருள்கள் உண்டு. பண் என்ற சொல்லிற்கு இருபத்தொரு பொருள்களை அகராதி சுட்டுகின்றது. இவ்விரண்டு சொற்களுக்கு உரிய பொருள்களுக்கும் பண்பாடு என்ற சொல்லுக்கு இன்று வழங்கும் பொருளுக்கும் பொருத்தம் இருப்பதாகத் தெரியவில்லை.

பண்பு + படுதல் = பண்பாடு என்றாயிற்று. இதன்கண் பகர உகரம் கெட்டதற்குத்தக்க காரணம் காட்ட இயலவில்லை. எனவே இவ்விரு சொற்களை மூலச்சொற்களாகக் கொண்டு பண்பாடு என்ற சொல் உருவாயிற்று.

பண்படு என்ற சொல் தமிழில் அண்மைக் காலமாக வழங்கிவரும் வினைச்சொல் இச்சொல்லை ஆங்கிலப்படுத்தும் பேரகராதி, to become refine or to refirm என்று பொருள் தருகிறது. பண்பட்ட செந்தமிழ் என்பது தனிப்பாடல் பண்பட்ட என்ற சொல்லின் பொருள் செம்மமைப்படல் அல்லது சீர்திருந்துதல் ஆகும்.

*பண்பாடு மனித சமுதாயத்தின் வளர்ந்த நிலையைக் காட்டுவதாகும். அவர்தம் மனச் செம்மைப்பாட்டை விளக்குவதாகும். எனவே செம்மைப்படுதல், சீர்திருந்துதல் என்ற பொருள்களை உடைய பண்படு என்ற சொல்லடியாகப் பண்பாடு என்ற சொல் வந்தது என்பது பொருத்தமாகும்.*
*உடன்படு – உடன்பாடு, செயல்படு – செயல்பாடு வழிபடு – வழிபாடு முரண்படு – முரண்பாடு என்பன போல பண்படு என்ற சொல் வழக்கு, பண்பாடு என்று ஆகி இருக்கலாம்.*
*பண்பாடு (Culture) மாந்தனின் வளர்ந்த நிலையை மட்டுமன்றி, சமுதாயத்தின் படிந்த நிலையையும் எடுத்துக் காட்டுகின்றது. வளர்ந்த நிலை என்பது பின்னர் வந்த சொத்து. படிந்த நிலை என்பது பரம்பரைச் சொத்து. இந்த ஒரு நிலைகளையும், ஒருங்கே தாங்கிய 'கல்சர்' என்பதனைப் போலத் தமிழிலக்கியத்தில் சொல் வழங்கவில்லை. கல்சர்'என்ற சொல் ஆங்கிலத்தில் வரலாற்று துறையில் ஒரு பொருளிலும், மானுடவியல் துறையில் வேறு ஒரு பொருளிலும் கையாளப்படுகிறது. உயர்பண்புடைமையே பண்பாடு எனக் குறிக்கப்படுகிறது. மக்களது அறிவுநலம், கருத்துநலம், குணநலம், கொள்கைநலம், ஒழுக்கநலம், வாழ்க்கை முதலியன மேலும் வளர்ந்து திரிந்து வரும் முறையைப் பண்பாடு குறிக்கும்.*

*மேத்யூ ஆர்னால்டு : -*

*'பண்பாடு உயர்ந்த நோக்கங்களைப் போற்றக் கூடியது. அகவயமானது உயிரிபோல் இயங்கவல்லது, முடிவானது, நிறைவை, இசைவிணக்கமான நிறைவை, பொதுவான நிறைவை, ஒன்றை அடைய விழையாமல் நன்றாக ஆகின்றநிறைவை, சுற்றுச் சூழலின் வெளிப்பகுதியேயன்றி, மனம் ஆன்மா ஆகியவற்றின் அகநிலையைத் தருகின்ற நிறைவைப் பற்றிப் படிப்பது தான் பண்பாடாகும்' என்கிறார் என்ன வைத்திருக்கிறோமோ அது நாகரிகம் என்னவாக இருக்கிறோமோ அது பண்பாடு.*
*பண்பாடு என்ற சொல்லாக்கத்தின் விளக்கம்:*
*பண்பாடு என்பது இரண்டு வகைப்படும். ஒன்று உலகியல் பண்பாடு அதாவது மெட்டீரியல் கல்சர் என்று சொல்லப்படுவது. இன்னொன்று அது அல்லாத அதற்குப் புறனாக இருக்கக்கூடிய பண்பாட்டு அசைவுகள்.*
*'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' – கலித்தொகை*
*என்ற கலித்தொகை வரிகளிலிருந்து அவர் உருவாக்கினார். ஆனால் நம்முடைய பழைய தமிழ் மரபிலே நாகரிகம் என்ற சொல் இன்று நாம் ஆங்கிலத்திலே Culture என்றும் Civilization என்றும் இரண்டாகச் சொல்கிறோமே அது இரண்டையும் ஒருசேரக் குறிக்கும்.*
*'முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்*
*நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்' – நற்றிணை (355)*
*'பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க*
*நாகரிகம் வேண்டு பவர்' – குறள் (580)*
*என்பது ஒரு மனச் செவ்வியைக் குறிக்கும். நமக்கு பழைய சொல் நாகரிகம் தான் அதுவே Culture என்பதையும் Civilization என்பதையும் குறிக்கும். பண்பாடு என்பது இருபதாம் நூற்றாண்டுச்சொல், ஆனால் இது மிக நல்ல சொல்லாக்கம் ஆகும். இதற்கு இணை கிடையாது.*
*பண்பாடு என்பது மதம் சார்ந்ததா? அன்றி நிலம் சார்ந்ததா?*
*பண்பாடு என்பது நிலம் சார்ந்தது. ஏனென்றால் உலகில் மதங்கள் எல்லாம் உருவாகிச் சில நூற்றாண்டுகள் தான் ஆகின்றன. ஆனால் பண்பாடு உருவாகி பல நூற்றாண்டுகள் ஆகிவட்டன. மதம் என்பது ஒரு நிறுவனக் கட்டுமானம். மதங்கள் நிறுவனமாக மாறுவதற்கு முன்னாலேயே, மனிதன் எப்பொழுது மனிதனாகிறானோ அப்பொழுதே ஒரு பண்பாடு உருவாகிறது. இந்தப் பண்பாடு நிலம் சார்ந்துதான் உருவாகிறது. இங்கு பண்பாடு என்பது நிலம் சார்ந்தது. மதங்கள் பிறப்பதற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் பண்பாடுடையவர்களாக இருந்தார்கள். மதங்கள் உருவாகி பண்பாட்டிலே இடைவெட்டாக பல செய்திகளை நிகழ்த்துகிறது. மதம் என்பது அதிகாரத்தை நோக்கிய ஒரு நகர்வு. அது எந்த மதமாக இருந்தாலும் சரி. திராவிடப் பண்பாடு, அரேபியப் பண்பாடு, சீனப் பண்பாடு, தென்னமெரிக்க மக்களின் பண்பாடு என்று பல்வேறு வகையான நிலம் சார்ந்த பண்பாடுகள் உருவாகின. இதை வரலாற்றிலே படிப்பதாக இருந்தால் கூட மஞ்சளாலற்றங்கரை நாகரிகம், நைல் நதிக்கரை நாகரிகம், சிந்துச் சமவெளி நாகரிகம், காவிரிக்கரை நாகரிகம் என்றுதான் படிக்கிறோம். எனவே பண்பாடு என்பது நிலம்*

சார்ந்தது. நிலம் என்றால் வெறும் மண் அன்று. நிலம் என்பது நிலம், நிலப்பகுதியில் வாழ்கின்ற மக்கள், அவர்கள் பேசுகிற மொழி, அவர்களுடைய உற்பத்திப் பொருட்கள், அவர்களுடைய பல்வேறு வகையான கருவிகள், புழுங்கு பொருட்கள், இசை, கலை இலக்கிய வெளிப்பாடுகள், வாய்மொழி மரபுகள் எல்லாம் சேர்ந்ததற்குப் பெயர்தான் பண்பாடு, அது நிலம் சார்ந்தது தான் பிறக்கின்றன.

சமூக பண்பாடு :

நாகரிகம், பண்பாடு என வழங்கும் தமிழ்ச் சொற்களும் கலாசாரம் (கலை ஆசாரம்) என வழங்கும் வட சொல்லும் (Culture Civilization) என வழங்கும் ஆங்கிலச் சொற்களும் உணர்த்துகின்ற பொருள், நாகரிகம் என்பது பழைய தமிழ்ச் சொல் பண்பாடு என்னும் சொல் இருபதாம் நூற்றாண்டின் ஆக்கம். மனிதனின் செம்மையான செயல்களில் வெளிப்பட்டுத் தோன்றும் நிகழ்வுகளை மட்டுமே இன்றைக்கும் 'நாகரிகம்' என்ற சொல் குறிக்கிறது. பண்பாடு என்ற சொல் சிந்தனையில் செம்மை. செயலில் செம்மை என்ற இரண்டையும் சேர்ந்தே குறிக்கிறது. கலாசாரம் என்ற வட சொல்லும் Culture என்னும் ஆங்கிலச் சொல்லும் இதே அளவுக்கு பொருள் வீச்சு உடையனவாகக் கொள்ளப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டம் சொல் வழியாகவும் (பேச்சு மொழி, சொல் வழித் தோன்றும் பிற கலைகள்) சொல் அல்லாத வழியிலும் (அசைவுகள், சடங்குகள் முதலியன) தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும்.
இவ்வெளிப்பாடுகள் கண்ணுக்குப் புலப்படுவனவாகவும் அமையும் புலப்படாதவாறும் அமையும் என்பது பண்பாடு குறித்த ஒரு விளக்கமாகும். இதனை உலகியற் பண்பாடு (Material Culture) என்பதற்குரிய விளக்கமாகவே கொள்ள வேண்டும். இதுமட்டுமின்றி வேறு சிலவும் பண்பாட்டின் கூறுகளாகவும் அமைகின்றன. ஒன்று, பல்லாயிரக்கணக்கான ஆண்டு பரிணமத்தில் இருந்துபெற்ற அனுபவங்கள் மனித மூளையில் உறைநிலையில் இருக்கின்றன. அவை சற்றே இளகி மனிதக் கூட்டத்தின் செயல்பாடுகளை வடிவமைக்கின்றன. மற்றொன்று, உடல்ரீதியாக உயர்வகைப் பாலூட்டியான மனிதன் என்னும் உயிரியின் இயல்பு ஊக்கங்கள்(Instincts)இவையிரண்டும் மனிதக் கூட்டத்தின் நடவடிக்கைகளில் குறுக்கு வெட்டாகப் பாய்கின்றன. இவற்றையும்சேர்ந்தே நாம் பண்பாட்டினை மதிப்பிட வேண்டும்.

இலக்கியங்களில் பண்பாடு:

மொழி எப்போதுமே பண்பாடு வயப்படுகின்றது. மொழியின் கலையாகிய இலக்கியமும் பண்பாட்டையே வெளிப்படுத்துகின்றது. மொழியே பண்பாடு என்னும் சூழலுக்குள் சென்று ஆராய வேண்டும். ஏனெனில் மொழி பண்பாட்டைக் கட்டமைக்கிறது. பண்பாடு மொழியைக் கட்டமைக்கிறது. இரண்டும் பரஸ்பரம் சார்ந்தியங்கும் இயங்கியல் தளத்தை ஆராய்வது இலக்கிய மானிடவியலின் இலக்குகளில் ஒன்றாக அமைய வேண்டும்.
பண்பாட்டின் பயன்முறை கலையாகவே (Cultural Pragmatics)இலக்கியம் அமைகிறது. இலக்கியத்தில் மொழியையும் அது தரும் பொருளையும் சமூகம்சார்ந்து பொருள்கோடல் செய்யும் போது மொழியானது சமூகக் குறியீட்டியலாக மாறுகிறது. ஆதலின் இலக்கிய மானிடவியலானது மொழியையும் பனுவலையும் சமூகம், பண்பாடு ஆகிய இரண்டோடும் இணைத்தறியமுற்படுகிறது.
இலக்கியவியல் படிப்பிலிருந்து விலகி மொழிசார்ந்தும், பண்பாடுசார்ந்தும் தனிக்கவனம் செலுத்தும் பிரிவாக இது பரிணமித்துள்ளது. ஆகவே இலக்கியமானிடவியலானது இலக்கியமொழி சாதாரணமொழி, எனும் அணுகுமுறையோடு எந்த ஒரு இலக்கியப் பனுவலையும் ஆராய்கிறது.

விருந்தோம்பலில் பண்பாடு :

மனிதன் ஒரு சமூக விலங்கு கூடி வாழ்ந்தால் மட்டுமே அவனால் வலிமையான விலங்குகளை எதிர்த்துப் போரட முடியும் என்ற நிலை இருந்தால் அவன் கூட்டமாக வாழத் தொடங்கினான். பழங்களை உண்டபோது தான் மட்டுமே சாப்பிட வேண்டும் என எண்ணிய அவன் விலங்கை வேட்டையாடியபோது அந்த மாமிசம் அதிக நாள் பயன்படாது என்கிற காரணத்தால் அடுத்தவர்களோடு பகிர்ந்து உண்ண ஆரம்பித்தான். அப்பொழுதுதான் முதல் மனித விருந்து தொடங்கியது.

மனிதன் குடும்பங்களாக வாழத் தொடங்கிய போதே வலிமையானவர்கள் எளிமையானவர்களை வதைக்காமல் இருக்க நீதி, மரபு, ஒழுக்கம், சட்டம் போன்றவற்றை வடிவமைக்கத் தொடங்கினான். எளிய மனிதர்களை அன்போடு நடத்த வேண்டும் என்கின்ற எழுதப்படாத அறம் பல்வேறு சமூகங்களில் கசியத் தொடங்கியது. அதன் நீட்சியாகப் பிறந்ததே விருந்தோம்பல். விருந்தோம்புகின்ற குணமே ஒருவருடைய உண்மையான பண்பாடு. சிலர் நயமாகப் பேசுபவார்கள். தேன் ஒழுக ஒழுகச் சொற்களை வழியவிடுவார்கள். ஆனால் பசியோடு இருப்பவர்களுக்கு ஒரு குவளை தண்ணீரைக்கூடத் தரமாட்டார்கள். சிலருடைய அறைக்குச்சென்றால் எப்போது எழுந்து வரலாம் என்கிற எண்ணம் ஏற்படும். அந்த அறையின் அதிர்வலைகளே நம்மை விரட்டி விடும். சிலருடைய அறைகளுக்குச் சென்றால் எழுந்து வர மனமே இருக்காது. சிலரைச் சந்திக்கிறபோது முதல் முறை பார்க்கும்போதே பல நாட்கள் பழகியதைப்போல நடந்து கொள்வார்கள். விரும்பிய தேநீரையோ, பழரசத்தையோ நம் விருப்பத்திற்கேற்பத் தருவித்துத் தருவார்கள். நாம் அவர்களோடு இருக்கம்போது எந்த குறுக்கீட்டையும் அனுமதிக்க மாட்டார்கள். அப்படிப்பட்டவர்களுடன் கழித்த சில நிமிடங்கள் நம் மனத்தில் கல்வெட்டுகள்போலப் பதிந்துவிடும்.

இலக்கியத்தில் உள்ள விருந்தோம்பல் பற்றிப் படிக்கிறபோது வேற்றுமையற்ற மகத்தான சமூகம் ஒன்று தமிழகத்தில் ஒரு காலத்தில் இருந்திருக்கிறது என்பதை உணரமுடிகிறது. பைந்தமிழ் இலக்கியங்களைப் பற்றியெல்லாம் படிப்பதும் எழுதுவதும், பசியோடு வந்தவர்களுக்கு உணவிடுவதைத் தமிழ் மரபும், தமிழ் மண்ணும், தமிழ் இலக்கியங்களும் தொன்று தொட்டுப் போற்றி வந்திருக்கின்றன. ‘பசிப்பிணி மருத்துவர்’ என்ற புறநானூறு முதல் ‘வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதர்க்கெல்லாம்’ என்கிற பாரதி காலம் வரை ஒருவர் பசியை ஆற்றுவது உன்னதமான செயலாகத் தொடர்ந்து கருதப்பட்டு வந்திருக்கிறது. ‘பசித்திரு’ என்ற அறிவுரீதியாகத் தேடலை வலியுறுத்திய வள்ளலார் கூட வடலூரில் வயிறு பசித்தவர்களுக்கு உணவை வழங்கும் வழக்கத்தை ஏற்படுத்தினார். புறநானூறு மன்னர்களின் வாழ்க்கையை அப்படியே படம்பிடித்துக் காட்டும் பைந்தமிழ் ஆவணமாகத் திகழ்கிறது. வீரம், மானம், போர்த்திறன், ஆளுமை, வரி விதிப்பது, மக்களைப் பாதுகாப்பது, நிர்வாகம் போன்ற பல நுண்ணிய செய்திகளைப் பேசும் புறநானூற்றில் விருந்தோம்பல் குறித்தும் சிறப்பான செய்திகள் இடம்பெற்றிருக்கின்றன.

உணவு குறியீடுகளில் பண்பாடு:

தண்ணீரும் உணவும் மனித உடலை வளர்ப்பன. உணவு என்பது இயற்கையும் செயற்கையும் ஆகிய பொருட்களால் ஆனது. மனிதகுலத்தில் மக்கள் இனங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே உணவு நெறிகள் உண்டு. எளிதில் கிடைப்பது, பச்சையாக உண்பது, சமைத்து உண்பது, விதிக்கப்பட்டவற்றை உண்பது, விதிக்கப்பட்ட நேரத்தில் உண்பது, விதிக்கப்பட்ட சடங்கியல் அசைவுகளோடு உண்பது என மக்கள் திரள்களின் உணவுப் பழக்கவழக்கங்களைப் பல்வேறு வகையில் அணுகலாம். இதற்கு எதிர்நிலையாக விலக்கப்பட்ட முறை, உணவு, காலம், அளவு, பொருட்கள் என்றும் மனிதர்களின் உணவுப் பழக்கவழக்கங்களைப் பகுத்துக் காண முடியும். கருவுற்ற பெண்ணைத் தாய் வீட்டிற்கு அழைத்துச் செல்லும்போது சுற்றியுள்ளவர்களுக்குப் பழம் கொடுப்பது தமிழ் மக்களின் வழக்கமாகும் நெல்லை மாவட்டத்தில் இச்சடங்கிற்குப் ‘பழம் போடுதல்’ என்றே பெயர். இங்கே பழம் என்பது பிறக்கப் போகும் குழந்தையின் முழுமையான வளர்ச்சியைக் குறிக்கும் குறியீடாகும். உணவின்றி வாடிய மக்களின் கடைசி உணவாகக் கீரை அமைகின்றது. அதாவது கீரை ஏழ்மையின் சின்னமாக அமைகின்றது. வறுமைப்பட்ட மக்களே கீரையினை உணவாகக் கொண்டனர். என்பதனைச் சங்க இலக்கியம் இரண்டு இடங்களில் குறிப்பிடுகின்றது. எனவேதான், இன்றளவும் கோயில்களில் கீரை தெய்வங்களுக்கு உணவாகப் படைக்கப்படுவதில்லை. ஏனென்றால் தெய்வங்கள் ஏழ்மையானவை அல்ல, எல்லாச் செல்வங்களையும் மக்களுக்கு அருளுவனவாகும். பயிறு வகைகள் பனிக்காலத்தில் புன்செய் மண்ணில் விளைபவையாகும். அவற்றை நுகரும் மக்களாலும் அவை இறப்பின் அல்லது இழப்பின் குறியீடாகவே கருதப்படுகின்றன. ‘பயிறு அவித்தல்’ என்ற சொல்லாட்சி தென் மாவட்டங்களில் இழப்பினைக் குறிப்பதாகும். குறிப்பிட்ட பறவை அல்லது விலங்கினைக் குலக்குறிச் சின்னமாக உடைய மக்கள் அவற்றின் இறைச்சியை உண்ணுவதில்லை. அது

*குலமுதல்வரைக் கொன்று உண்ணுவதாகும். என்ற நம்பிக்கையே இதன் அடிப்படை பெரும்பாலும் தெய்வத்திற்குப் பலியிடும் பறவைகள் அல்லது விலங்குகள் ஆணாக இருக்க வேண்டும் என்பது எழுதபடாத நியதியாகும். பெண் உயிரி விலக்கப்பட்டது என்பதே இதன் குறியீடாகும். உண்டு முடித்தபின் உண்ணும் 'தாம்பூலம்'(வெற்றிலை, பாக்கு) மகிழ்ச்சியின் குறியீடாகும். இறந்தவர்களின் வாயில், வெற்றிலை, பாக்கு வைத்து அனுப்புதல் அவர்கள் மகிழ்ச்சியாக மறுஉலகப் பயணம் செய்கிறார்கள் என்பதன் குறியீடாகும். பழைய இனக்குழுக்களின் நம்பிக்கைகள் செறிந்து முற்றுகிறபோது அவை குறியீடுகளாக வளர்ந்து நிலை பெற்றுவிடும். இந்தக் குறியீடுகளில் பிற்காலத்தில் அதிகாரம் குறுக்குவெட்டாகப் பாய்ந்து இவற்றை ஊதிப் பெருக்க வைக்கும். ஆனால், குறியீடுகள் அனைத்தும் இனக்குழுச் சமூகங்களில் அதிகாரச் சார்பின்றிப் பிறந்தவை என்பதே மனிதகுல வரலாறு காட்டும் உண்மையாகும்.*

*சோறு விற்றல் :*

*தமிழர் பண்பபாட்டில், சோறும் நீரும் விற்பனைக்கு உரியவையல்ல என்ற கருத்து இலக்கியங்களைக் கூர்ந்து நோக்கும்போது தெரிகிறது. வறியார்க்குச் சோறிடுதல் அறம் என்கிற கோட்பாடு மட்டுமே திரும்பத் திரும்ப வலியுறுத்தப்படுகிறது. கிராமப்புறங்களில் ஊர் மடத்தில் (சாவடி) வழிச் செல்வோர் யாரும் உண்ணாமல் இரவில் படுத்திருந்தால் ஊர்க்காரர்கள் 'இரவுச்சோறு' கொடுக்கும் வழக்கம் 50, 60 ஆண்டுகளுக்கு முன்புவரை நடைமுறையில் இருந்தது.*

*நமது பண்பாட்டில் மருத்துவம் :*

*பண்பாடு தனிமனித ஒழுக்கம் சார்ந்ததன்று பண்பாடு ஒரு சமூகத்தினுடைய வெளிப்பாடு, மக்கள் திரள் தன்னை வெளிப்படுத்திக்கொள்கிற முறை. சொல்லாலே, செயலாலே, கருத்தினாலே தன்னை வெளிப்படுத்திக்கொள்கிற முறைக்கு பண்பாடு என்று பெயர். நம்முடைய தெய்வங்கள், நம்முடைய இசை, நம்முடைய கலை, நம்முடைய உணவு, நம்முடைய உடை, நம்முடைய உடையை நாம் செய்கிற முறை, நம்முடைய உடையை நாம் உடுத்துகிற முறை எல்லாமே பண்பாடு சார்ந்த அசைவுகள் ஆகும். பண்பாடு, நம்முடைய ரத்த ஓட்டத்தோடு கலந்ததாகும். அது நமது மூச்சுக்காற்றைப் போல! உங்கள் முன்னாலே மூச்சுவாங்கிக்கொண்டு பேசிக்கொண்டிருக்கிறோம் என்று நினைக்கவில்லை. நாம் மூச்சு வாங்கிகொண்டிருக்கிறோம் என்பது எப்போது தெரியுமென்றால், மூச்சிலே ஏதேனும் அடைப்பு ஏற்படும்போது அதை உணர்கிறோம். பண்பாடு என்பதை அது மீறப்படுகிறபோது உணர்கிறோம். இன்னொரு கட்டமாக, தேவைப்படுகிற போதும் பண்பாட்டை உணர்வோம். நம் வீட்டிற்குத் தண்ணீர் போதாது என்கிறபோது வீட்டின் மண்ணிற்குக் கீழாகவே தண்ணீர் இருக்கிறதே என்று நமக்குத் தோன்றும். எனவே சமூகத் தேவை ஏற்படுகிறபோதும் நடைமுறை வாழ்க்கை மீறப்படுகிறபோதும் நாம் பண்பாட்டைப் பற்றிய கவலைப்படுகிறோம்.*

*உலகமயமாக்களில் பண்பாடு :*

*உலகமயமாக்கம் என்ற சொல்லை ஏன் திரும்பத்திரும்பக் கேட்டுக்கொண்டிருக்கிறோம் உலகமயமாக்கல் என்றால் பொருளாதார நடவடிக்கை என்றுதான் பத்திரிகை படிப்பவர்களும் மெத்தப்படித்தவர்களும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். உண்மையில் உலகமயமாக்கல் கலாச்சாரத் தாக்குதலாக இருக்கிறது. மிகப்பெரிய தொன்மையான காலாச்சாரமுடைய தமிழ்மொழி பேசுகிற மக்கள் மீதும் அது தன் மூலதனம் கொண்டு தொடுத்திருக்கிற கலாச்சார யுத்தம். இந்தக் கலாச்சார யுத்தத்தை நம்மீது தொடுத்திருப்பது யார் என்று கேட்டால் மிக, மிகப்பெரிய நம்பமுடியாத அளவிலான பன்னாட்டு மூலதனமே எனலாம்.*

*முடிவுரை :*

*அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்*
*பண்புடைமை என்னும் வழக்கு – குறள் (992)*

*மனிதன் தன் சமூகத்தின் அங்கமாகத் தான் கற்றவற்றைத் தன் இனத்தாருக்கும், தன் சந்ததியாருக்கும் கற்பிப்பதையே பண்பாடு என்பர். சமூகத்தின் வாயிலாக கற்றுக்கொண்டு பிறருக்குக் கற்பித்துக் கொடுக்கும் கற்றுப்பயிலும் நடத்தையையே பண்பாடு என்று குறிப்பர்.*

*பார்வை நூல்கள் :*

*1. பரமசிவன், தொ. - 2001 பண்பாட்டு அசைவுகள் நாகர்கோயில் காலச்சுவடு பதிப்பகம்.*

*2. பாரதிபக்தவத்சலம் - 2002 தமிழர் மானிடவியல் சிதம்பரம் மெய்யப்பன் தமிழாய்வகம்.*

*3. ஸ்டிபன், ஞா. – 1991 பண்பாட்டு வேர்களைத்தேடி. பாளையன்கோட்டை நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்.*

*4. பண்பாட்டு மானிடவியல் - பகத்வத்சலம் பாரதி – புதமை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் - புதுச்சேரி.*

*5. க.ப. அறவாணன் - தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள் - ஐந்திணைப் பதிப்பகம்.*

*6. கைலாசபதி க. – பண்டையத் தமிழர் வாழும் வழிபாடும் - சென்னை.*

*7. பிள்ளை கே.கே. – தமிழக வரலாறு – மக்களும் பண்பாடும் - தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம், சென்னை.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********